







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 11 12 .03.2025



ஶ்ரீமதே ஶ்ரீ வராஹமஹாதேசிகாய நம:


# உள்ளே....

# படிக்க வேண்டிய உபதேசங்கள்

*1.திருக்குடந்தை ஆண்டவன் ..........முத்துகள்..........*

*2. தேசிகனின் கீதார்த்த சங்கிரஹத்தில் (6ம் பா) சில முத்துக்கள்*

*3. ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன் 1952ல் அருளிய லக்ஷ்யவசனம்*



*******

# *1.* திருக்குடந்தை ஆண்டவன் ..........முத்துகள்..........

1. திருமங்கையாழ்வார் பெருமாளைப் பற்றிப் பாடினார்.
   பெருமாள் வந்தார். 'உனக்கு என்ன வேண்டுமென்றார்?
   எனக்கு உன் திருவடிகள் வேண்டுமென்றார்'.
   'அப்படியே தந்தேன்' என்றார்.
   ஆழ்வார் அவரைப் பார்த்தார்.
   உன் திருவடிகளை யார் கேட்டது.
   உன்னை வணங்கும் திருவடியார்களைக் கேட்டேன் என்றார்.

2. "கீன்னார் கடல்சூழ் இலங்கைக் கிறைவன் தன் திண்ணாகம்
   பிளக்கச் சரம் செலவுப்பத்தாய் விண்ணோர் தொழும்
   வேங்கடமாமலைமேய அண்ணா அடியேன் இடரைக்
   களையாயோ?"
   பகவான் நாமத்தை உச்சரிச்சா வெண்கூற்றம்கூட நெருங்காதாம்
   அதாவது எமன் கிட்டே வரமாட்டானாம்.

3. பாவத்தில் புண்ணியம்
   இப்படித்தான் ஒரு பிராமணன் காலையிலே எழுந்திருந் தால் எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு குளத்தில் போய் ஸ்நானம் பன்னிவிட்டு செய்யவேண்டியதெல்லாம் செய்துவிட்டு, துண்டைப் பிழிந்து கட்டிக் கொண்டு வீட்டுக்கு வரும்போது மணி பத்தாகுமாம். இதனால் எந்தப் பிரயோசனம் யாருக்கும் இருக்காதாம். இவன் ஒரு நாள் இறந்துவிட்டான். இவனைத் தேவகணங்கள் விஷ்ணு லோகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது எமதூதுவர்கள் வந்து, இவன்தான் ஒரு புண்ணியமும் செய்ததில்லையே? இவனை எங்களிடம் விட்டுவிடுங்கள் என்றார்களாம். அதற்குத் தேவகணங்கள் கூறினார்களாம். இவன் தினமும் ஒரு புண்ணியம் பண்ணிக் கொண்டே வந்திருக்கிறான். என்ன தெரியுமா? தினமும் குளித்து விட்டு கரையேறும்போது துண்டைப் பிழிந்துவிட்டுத்தான் வருவது வழக்கம். அப்படி

வரும்பொழுது பிழிந்த நீர், தினமும் துளசிச் செடியில் விழுமாம். ஆகவே துளசிச் செடிக்குத் தண்ணீர் ஊற்றிவருகிறார். அந்தப் புண்ணியத்திற்காக நாங்கள் விஷ்ணு விடம் கொண்டு செல்கிறோம்" என்றார்.
எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும் புண்ணியம் பண்ணாதவனாக இருந்தாலும் அவனையறியாமலே ஒரு புண்ணியம் செய்திருந்தாலும்கூட, பகவான் அவனுக்கு மோட்சத்தை அளிக்கிறார்.

4. மதுரை வைகை ஆற்றில் தினமும் ஒரு செம்படவன் மீன் பிடிப்பது வழக்கம். அவன் அப்படிப் பிடிக்கும்பொழுது, பெரியமீன் வருமல்லவா, அது வெளியேவரும்போது பார்த்து விட்டு உள்ளே போய்விடாமலிருக்க அந்த மீன் வந்தவுடன் அதனுடன் நீருக்குள்ளேயே மூழ்கி, அதைப் பிடித்துக் கொண்டு, வெளியே வருவானாம். தினமும் அவனது தொழில் இப்படியே நடக்கும். திடீரென்று ஒருநாள் இறந்துவிட்டான். இவன் மேலே போகும்பொழுது தேவகணங்கள்தான் கூட்டிச் சென்றார்களாம். அப்பொழுது எமகிங்கதரர்கள் வந்து எங்களிடம் ஒப்படையுங்கள் என்றார்களாம். 'முடியாது என்றார்களாம். தேவகணங்கள். இவனை மோட்சத்திற்குக் கொண்டு சொல்கிறோம்" என்றார்கள். எப்படி இவனுக்கு மோட்சம் கிடைக்கும். மீன் பிடிப்பது இவனது தொழிலாயிற்றே?" என்று எமதூதுவர்கள் கேட்டார் கள். தினமும் மீன்பிடிப்பதற்காக நீரில் மூழ்குவான். ஒருநாள் அதாவது சித்திரைப் பௌர்ணமியன்று பெருமாள் விக்ரகத்தை வைகையாற்றில் மூழ்கி எடுப்பார்கள். அந்த நேரத்தில் செம்படவனும் நீரில் மூழ்கிய காரணத்திற்காக நாங்கள் தேவலோகத்திற்கு அழைத்துச் சொல்கிறோம்" என்றார்கள்.
பகவானைப் பொறுத்தவரையில் புண்ணியம் பண்ணாம போனாலும், பாவம்னு தெரிஞ்சு செய்யாமல் இருந்தால் அதுவே போதுமானது. செய்த நன்றியை மறக்காதவர்.

5. திருமங்கையாழ்வார் :: காஞ்சிபுரத்தில் ஒரு சமயம் திருமங்கையாழ்வார் வரும் போது பசிமயக்கத்தில் இருந்தார். அப்பொழுது பகவான் தயிர் பிசைந்து சாதத்தை ஆழ்வாருக்குக்

கொடுத்தார். அப்பொழுது ஆழ்வார் "சுவாமி நீங்க யாரு" என்று கேட்டார். என்னைத் தெரியுமா? உனக்கு என்றார்? ஆழவார் உடனே பாடினார்.

"தொட்ட படையெட்டும் தோலாதவென்றியான் அட்டபுய கரத்தான் நான்கு குட்டத்துக் கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தான் முதலே நங்கட்குச் சார்வு"

அட்டபுயம் உள்ள அந்தப் பகவான்தானே நீயென்றார். வித்வான் என்றால் சாமர்த்தியமும் நிறைந்திருக்க வேண்டும்.

6. சங்கல்ப ஸூர்யோதயத்தில் சொல்கிறார் ;—
யதி , சிஷ்யனுக்கு ஆசீர்வாதம் செய்கிறார்

“ப்ரதிஷ்டாபித வேதாந்த : ப்ரதிக்ஷிப்த பஹிர்மத : |
பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரி கல்யாண பாஜநம் ||”

நடாதூர் அம்மாள், ஸ்வாமி தேசிகனைப் பால்ய வயதில் அனுக்ரஹித்த ச்லோகம் . ஸ்வாமி தேசிகன் , சிறு குழந்தையாகத் தன்னுடைய மாதுலர் (மாமா) அப்புள்ளார் ( ஆத்ரேய ராமாநுஜர் ) கூடவே, நடாதூரம்மாளின் காலக்ஷேபத்துக்கு, கச்சிவாய்த்தான் மண்டபத்துக்குப் போனபோது, நடாதூரம்மாள், குழந்தையான ஸ்வாமி தேசிகனின் திருமுக காந்தியை⁻ முக விலக்ஷணத்தைக்கடாக்ஷித்து , அநுக்ரஹித்து,ஆசீர்வாதமாக அருளிய ச்லோகம் . இதைத்தான் இயற்றிய சங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில், ஸ்வாமி தேசிகன் , யதி (ராஜன் ) தனக்கு ( சிஷ்யன் ) ஆசீர்வாதமாகச் சொன்னதாக, ஒரு காக்ஷியை ஏற்படுத்துகிறார். இது, ஸ்வாமி தேசிகனுக்கு, யதிராஜரிடம் உள்ள ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்துகிறது.

7. மதுரகவி, சடகோபரைக் கேட்டார்:—
“செத்ததன் வயிற்றில், சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும் ?”
அதாவது, ப்ரக்ருதிக்கு உயிரில்லை; உயிரில்லாத ப்ரக்ருதியான சரீரத்தில், அணுவான ஜீவாத்மா புகுந்தால், எதைஅனுபவித்துக் கொண்டு, எங்கு இன்பம் உண்டு என்று எண்ணி இருக்கும் ?

*ஸ்ரீ சடகோபன் பதிலிறுத்தார் :—*
*“அத்தைத் தின்று அங்கே கிடக்கும்”*
*அதாவது, சரீரத்தில் உள்ள ஐம்புலன்களால் கிடைக்கிற இன்ப துன்பங்களை நுகர்ந்து, இன்புற்றேன் என அங்கேயே கிடக்கும். ஸ்ரீ மதுரகவிகள் சந்தோஷித்து, ஸ்ரீ சடகோபரையே ஆசார்யராக இருக்குமாறு பிரார்த்தித்தார் சடகோபரும் அப்படியே அருளி, மதுரகவிகளுக்குத் தத்வங்களை உபதேசித்து, தான் இயற்றுகிற பாசுரங்களைப் பட்டோலை செய் யுமாறு நியமித்து, திருவிருத்தம்* **(100),**திருவாசிரியம் **(7)** பெரிய திருவந்தாதி **(87),.**திருவாய்மொழி **(1102)** ஆக **, 1296** *பாசுரங்களைச் சொல்ல, மதுரகவிகள், இவற்றைப்பட்டோலைப் படுத்தினார். பகவான் அளித்த மகிழம்பூ மாலையை அணிந்ததால், திருமேனி மாத்ரமல்ல, ஆழ்வாரின் ஸ்ரீஸூக்திகளிலும் மகிழம்பூ மணம் — அதாவது, ப்ரஹ்ம கந்தம் —அதாவது பகவானின் லீலைகள்,தத்வங்கள் ஆகிய மணம் வீசுகிறதாம். பிற மதஸ்தர்களின் குதர்க்க அர்த்தங்களால் வேதமாதா களைத்துப்ய் ,ஆழ்வாரின் திருவாய்மொழியில் ச்ரம பரிகாரம் செய்து கொள்கிறாளாம் . ஆழ்வார், சடவாயுவை ஜயித்ததுபோல,அல்ப அறிவாளிகளின் வீண்வாதங்களையும் ஜயிக்கிறாராம் .இப்படி, பகவானை இடைவிடாது த்யானித்து, அவனது சேர்க்கையை , ஆழ்வார் பெறுகிறார். இதனால், ஆழ்வாரின் மகிழம்பூ மணம் பகவானுக்கும், பகவானின் திருத்துழாய் மணம் ஆழ்வாருக்கும் பரவி உள்ளது . இப்படிப்பட்ட ஸ்ரீ நம்மாழ்வாரை நமஸ்கரிக்கிறேன் . பகவானை இடைவிடாது த்யானித்து அனுபவிக்கும் ஆழ்வாரை, ஸ்வாமி தேசிகன் விடாமல் த்யானம் செய்வதால் ,ஸ்வாமி தேசிகனிடமும் ,அவருடைய ஸ்ரீஸூக்திகளிலும் ,மகிழம்பூ வாசனையும் , துளசி வாசனையும் சேர்ந்து வீசுகிறது. இது ரஸானுபவம்.*

*8.* திருக்குடந்தை ஆண்டவன்*:-*
*திருருப்பாவையை பக்தியுடன் சொல்பவர்களைக் கண்டஉடன் அவர்களை அணைத்துக் கொள்வதற்காக நாலுகைகளுடன்*

கிருஷ்ணன் எழுந்தருளி இருக்கிறானாம். கோபிகைகள் பாவை நோன்பு செய்த பொழுது க்ருஷ்ணனுக்கு ஏழுவயது மட்டுமே ஆகியிருந்தது. அப்பொழுது க்ருஷ்ணனுக்கு நான்கு கைகள் இல்லை. கம்ஸனை வதம் செய்த பிறகுதான் நான்குகைகளுடன் காட்சி தந்தானாம். அப்படி இருக்க ஈரிரண்டு மால்வரைத்தோள் என்று எப்படி ஆண்டாள் கூறுகிறாள் எனில் எதிரிகளுக்குத் தெரியாமல் சங்கம் சக்ரம் தாங்கிய கைகளை மறைத்து வைத்து இருந்தானே ஒழிய அந்தரங்க பக்தர்களுக்குக் காட்டினானாம். கோபிகைகளை அணைத்துக் கொள்வதற்கு நான்கு கைகளைக் காட்டினான். ந்ருஸிம்ஹாவதாரத்தில் பத்துகைகளுடன் ஜ்வாலா ந்ருஸிம்ஹன் போல் தோன்றினானாம். பிறகு பிராட்டியை அணைத்துக்கொள்ளும் போது "நல்லை நெஞ்சே நாம் தொழும் நம்முடை நம்பெருமான், அல்லிமாதர்புல்க நின்ற ஆயிரம் தோளனிடம்" என்று ஆயிரம் தோள்கள் வளர்ந்ததாம். அதே போன்று "சரணாகத ஸந்த்ராண த்வராத் த்விகுண பாஹுநா என்று கஜேந்திரனைக் காப்பாற்றும் ஆவலால் எட்டுகைகளைக் கொண்ட அட்டபுயகரத்தானாக வந்தானாம்.

**********************




ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

# 2. தேசிகனின் கீதார்த்த சங்கிரஹத்தில் (6ம் பா) சில முத்துக்கள்

[மண்டி...........வரிசைகளும் ] கண் முதலிய ஜ்ஞாநேந் த்ரியங்களும், வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்களும், ப்ராணவாயுக்களும் சரீரத்தில் நின்று தத்தம் கார்யங்களைச் செய்யும்போது ஜீவாத்மாவாகிய தன்னை அவ்வேலைகளைச் செய்பவனாக நினையாமல், கர்மத்தால் வந்த இந்த்ரியங்கள் ப்ராணவாயுக்கள் இவற்றின் ஸம்பந்தத்தாலேயே ஜீவனுக்கு அவற்றைச் செய்யும் தன்மை உள்ளதாகக் கருதவேண்டும். ஜ்ஞாநஸ்வரூபனாக உள்ள ஜீவனுக்கு இயற்கையில் அந்தத் தன்மை இல்லையென உணரவேண்டும்,

[கண்டறியா.. நினைவுகளும்] ஜீவன் ஆசார்யனுடைய உபதேசத்தாலே ஆத்மஸ்வரூபத்தை உள்ளவாறு அறியவேண்டும். பின் அதிலேயே பழகிவந்தால் சரீரத்தையே ஆத்மாவெனக் கருதுதலாகிய விபரீத ஜ்ஞாநம் ஒழியும்; ஆத்மஸாக்ஷாத்காரத்தைப்பெற உறுதிபூண்டு உலகத்தில் தனக்கு ப்ரியமானதொன்றைப் பெற்றால் மகிழாமலும் அப்ரியமான விஷயத்திற்கு வருந்தாமலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருக்கும் அதிகாரி கல்விகற்று வணக்கமுள்ளவனிடத்தும், ஸாதாரணப்ராஹ்மணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், அதைத் தின்கின்ற சண்டாளனிடத்தும் ஆத்மஸ்வரூபத்தைப் பார்க்கும்போது எல்லா ஆத்மாக்களை யும் ஸமமாகப் பார்க்கவேண்டும். அந்த அந்தச் சரீரம் வேறுபட் டிருப்பினும் பரிசுத்தமான ஆத்மஸ்வரூபம் அனைத்தும் ஜ்ஞாநஸ்வரூப மாயிருப்பதுபற்றி ஸமமாகும்.

(இவ்விஷயங்களை ஐந்தாம் அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுநனுக்கு உபதேசித்தான்.)



# 3. ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன் 1952ல் அருளிய லக்ஷ்யவசனம்



ஸ்ரீ ரங்கநாத மஹாதேசிகன்
தெம்பிரையாண்டவன்

மிகவும் துர்லபமான மனுஷ்ய தேகத்தை எடுத்தும், அதிலும் ஸத்ஸம்ப்ரதாய ஸ்ரீ வைஷ்ணவ ஜன்மத்தை அநேக கோடி புண்ய ஜன்மங்களால் பெற்ற பாக்யவான்களாகிய நீங்கள் ஒரு நிமிடத்தைக்கூட வீணாகப் போக்காமல் நம்முடைய பூர்வாசார்யர்கள் அரும்பெரும் தவத்தால் தமக்குக் கிடைத்த ஸ்ரீபகவத் விஷயாம்ருதத்தை பெருக்குகிற ஆழ்வார் ஆசார்யாளுடைய திவ்யஸூக்திகளை ஸதாசார்ய பரம்பரையால் சிரத்தையுடன் சிரவணம்பண்ணி, ஸாராஸார விவேகம் கொண்டு, ஸாதுமார்க்கமாகிற அவரவர்க்குரிய வர்ணாச்ரம தர்மங்களை விடாமல் அனுஷ்டித்து, ஜீவன் உஜ்ஜீவிக்க வேண்டிய உபாயத்தை அனுஷ்டிப்பதன் மூலமாக எம்பெருமானுடைய திருவடிவாரத்தில் ஆத்மரக்ஷா பரஸமர்ப்பணம் பண்ணிவிட்டு, தன்யராய், பிற்காலத்தில் கொஞ்சம்கூட பாகவதாபசாரம் நேராமல் ஜாக்கிரதையாயிருந்து கொண்டு, இருந்த காலத்தில் பந்து மித்ர களத்ரரோடு க்ஷேமமாயிருந்து கொண்டு, இந்த ஜன்மாவஸாநத்தில் வேறொரு ஜன்மம் வராதபடி ஸதாசார்யன் உபதேசித்த திருமந்திரங்களை ஆவ்ருத்தி செய்து, ஸாது மார்க்கத்திலேயே நடந்து வரவேணும் என்று பெருமாள் ஆசாரியாள் பாதுகையை அனவரதம் பிரார்த்திக்கிறேன்.